# கல்வி அமைச்சு - தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞானக்கிளை

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2024
## முன்னோடி வினாத்தாள்

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

| 23 | T | I |
|---|---|---|

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

சுட்டெண் : ……………………………………

**அறிவுறுத்தல்கள்**

* இவ்வினத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
* **சகல** வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளியே எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* ஒவ்வொரு வினாக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க இல | வினா இல | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | 1 - 2 | |
| 2. | 3 - 9 | |
| 3. | 10 - 16 | |
| 4. | 17 - 22 | |
| 5. | 23 - 30 | |
| 6. | 31 - 38 | |
| 7. | 39 - 45 | |
| 8. | 46 - 50 | |
| | மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

- **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அந்த இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் மீது எழுதுக.

1. அரசியல்
   (1) அதிகாரம் மற்றும் அதிகாரத்துவத்துடன் தொடர்புடைய செயன்முறை மாத்திரமாகும்.
   (2) சட்டப்பூர்வமான நடைமுறைகள் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும்.
   (3) தேசத்தை ஆட்சி செய்தல் மட்டுமாகும்.
   (4) அரசியல் செயன்முறைகள் மற்றும் செயற்பாடுகளை கற்கும் துறையாகும்.
   (5) அரசுக்கும் சமூக பிரஜைகளுக்கும் இடையிலான செயன்முறையாகும். (……)

2. அரசாங்கம் என்பது
   (1) அரசுக்கு சமமானதாகும்.
   (2) நீண்டகாலம் நிலைத்திருக்க கூடியதாகும்.
   (3) அரசுக்காக செயற்படும் ஒன்றாகும்.
   (4) எல்லா அரசுகளிலும் ஒரே தன்மையினதாகும்.
   (5) அடிப்படை சட்டக் கட்டமைப்பினை கொண்டிராததாகும். (……)

[பக் 2 ஐப் பார்க்க]

3. உலமயமாதல் என்பது
(1) அரசின் எல்லையினை முக்கியத்துவப்படுத்துகின்றது.
(2) உலக பொருளாதாரம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்து இன்னும் விடுவிக்கப்படவில்லை என்கிறது.
(3) தொழிலாளர்களின் நகர்வில் முக்கியமான காரணியாக அமையவில்லை என்கிறது.
(4) நவதாராளவாத பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்பினால் வசதியளிக்கப்பட்டுள்ளது என்கிறது.
(5) இனத்திற்கான முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது என்கிறது.

(……)

4. சோசலிச அரசு
(1) பிரசைகளின் தனிமனித வாழ்க்கை தரத்தினை அபிவிருத்தி செய்யாது.
(2) 18ம் நூற்றாண்டின் பின்னரை பகுதியில் விருத்தியடைந்தது.
(3) அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தது.
(4) தொடர்ந்தும் லிபரல் ஜனநாயகத்திற்கு மாற்றிடாக அமைந்தது.
(5) ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் பரிசீலிக்கப்பட்டது.

(……)

5. ஆட்சி முறை (Regime) என்பது
(1) அரசாங்கத்திற்கு இணையானதாகும்.
(2) கருத்தியல், சமூக அடிப்படை மற்றும் தலைமைத்துவத்தின் ஊடாக அடையாளப்படுத்துவதாகும்.
(3) அதன் ஒழுங்கமைப்பிற்கேற்ப அனைத்தாண்மை ஆட்சியை உருவாக்கும்.
(4) கருத்தியலுக்கேற்ப கூட்டணியாட்சியை உருக்குவாக்கும்.
(5) தலைமைத்துவ அடிப்படையில் சமவுடைமைவாத ஆட்சியை உருவாக்கும்.

(……)

6. ஒற்றையாட்சி அரசாங்கத்தின் பண்பாக அமைவது
(1) அரசின் இறைமை அதிகாரம் தனியொரு தேசிய நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருத்தல்.
(2) சட்டத்துறை ஈரவை வாதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருத்தல்.
(3) இறைமை அதிகாரத்தினை உள்ளூராட்சி அமைப்புகளுடன் பகிர்ந்துகொண்டிருத்தல்.
(4) மத்திய அரசினால் கீழ்நிலை அரசியல் நிறுவனங்களை இல்லாதொழிக்க முடியாதிருத்தல்.
(5) சமஸ்டி முறையுடன் ஒப்பிடும்போது சிக்கல் தன்மை கொண்டதாயிருத்தல்.

(……)

7. ஒப்பீட்டு அணுகுமுறை விருத்தியுடன் **தொடர்பற்றக்** கூற்று
(1) சிட்னி வெபர் இதன் அபிவிருத்தியின் முன்னோடியாக இருந்தார்.
(2) மேற்குலக நாடுகள், தமது அரசியல் கட்டமைப்புகளை காலனித்துவ நாடுகளில் அறிமுகப்படுத்தின.
(3) இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் புதிய அரசுகள் தோற்றம் பெற்றன.
(4) பல்துருவ அரசியல் முறைமை தோற்றம் பெற்றன.
(5) விருத்தியடைந்த மற்றும் குறைவிருத்தி நாடுகளாக வகைப்படுத்தப்பட்டன.

(……)

8. சமூக ஜனநாயக வாதத்திற்குப் **பொருத்தமான கூற்றினை** தெரிவு செய்க
(1) கட்டாய தொழிலாளர் புரட்சியினை ஆதரிக்கின்றது.
(2) முதலாளித்துவத்தினை முழுமையாக ஆதரிக்கின்றது.
(3) ஜேர்மனிய சமூக ஜனநாயகக் கட்சி, இதன் தோற்றத்திற்கு வழிவகுத்தது.
(4) சமூக நலன்புரியினை ஏற்கவில்லை.
(5) பொருளாதார செயற்பாடுகளில் அரசு தலையிடக்கூடாது என்கின்றது.

(……)

9. முரண்பாடு தொடர்பான **பொருத்தமான கூற்றினை** தெரிவு செய்க
(1) எதிர்மறையான விளைவுகளையே எப்போதும் பெற்றுக்கொடுக்கும்.
(2) வேறுபட்ட இலக்குகள் மற்றும் அபிலாசைகளின் அடிப்படையில் தோற்றம் பெறுகின்றது.
(3) முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரத்தினை லூவிஸ் கோசர் அறிமுகப்படுத்தினார்.
(4) தனிப்பட்ட மற்றும் சமூகமாற்றத்திற்கு பங்களிப்பளிப்பதில்லை.
(5) முரண்பாட்டுத் தீர்வு என்பது பொதுவாக எளிமையான மற்றும் குறுகிய செயன்முறையாகும்.

(……)

10. மனித உரிமைகள்
    (1) அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டவையாகும்.
    (2) அரசினால் வழங்கப்படுபவைகளாகும்.
    (3) செயற்கையான நிர்மாணத்தின் விளைவாகும்.
    (4) மனிதத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவைகளாகும்.
    (5) காலத்திற்கு காலம் மற்றும் இடத்திற்கிடம் மாறுபடுபவைகளாகும்.

(……)

11. வரையறுக்கப்பட்ட அரசாங்கம்,
    (1) லொக், மொண்டஸ்கியூ ஆகியோர் இதற்கு எதிரானவர்களாவர்.
    (2) ஹொப்ஸ், மக்கியாவல்லி போன்றோர் இதனை ஆதரித்தவர்களாவர்.
    (3) அரசியல் அதிகாரத்தை மாத்திரம் வரையறுத்துள்ளது.
    (4) தனியாள் சுதந்திரத்தினை பாதுகாப்பதில்லை.
    (5) ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தோற்றம் பெற்றது.

(……)

12. சுவிட்சர்லாந்து,
    (1) சமஸ்டி முறையற்ற கூட்டுச் சமஸ்டியாக செயற்படுகின்றது.
    (2) 29 கண்டன்களினையும் 2600 கம்யூன்களினையும் கொண்டுள்ளது.
    (3) எப்போதும் கண்டன்களை விஞ்சும் அதிகாரம் மத்திய அரசிற்கு காணப்படுகிறது.
    (4) பகிரப்பட்ட மற்றும் சுயாட்சி என்பன அதன் மூலச்சித்தாந்தங்களாகும்.
    (5) கன்டன்களுக்கு சுயாட்சி நிர்வாக அதிகாரம் வழங்கப்படவில்லை.

(……)

13. பிரான்சிய அரசியல் யாப்பில்
    (1) அரசியல் அதிகாரம் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது.
    (2) நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்கும் பொறுப்பு சனாதிபதியை சார்ந்துள்ளது.
    (3) நிருவாக அதிகார பரவலாக்கத்தின் போது பிரதேச அரசியல் அலகுகளுக்கு சுயாதீனம் கிடைத்துள்ளது.
    (4) சனாதிபதி, சட்டத்துறை உறுப்பினர்களில் இருந்தே அமைச்சர்களை நியமிக்கின்றார்.
    (5) தேசிய பேரவையின் விருப்புடனே சனாதிபதி பிரதமரை நியமிக்கின்றார்.

(……)

14. பொதுக்கொள்கை செயன்முறையில்
    (1) தற்காலத்தில், சிவில் சமூகத்தித்தின் செயற்பாடுகள் அனைத்து மட்டங்களிலும் காணப்படுகிறது.
    (2) சட்டத்துறையில் உள்ள அதிகாரம் விரைவாக அதிகரித்துள்ளது.
    (3) நிறைவேற்றுத்துறையின் பொறுப்புகள் மிகவும் குறைந்துள்ளது.
    (4) ஒட்டுமொத்த முடிவுகளையும் சட்டத்துறையே மேற்கொள்கிறது.
    (5) ஜனநாயக நாடுகளின் நீதித்துறை, நீதிப்புனராய்வு அதிகாரத்தை அனுபவிக்கிறது.

(……)

15. இலங்கையில் அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதில் **பங்களிக்காத** காரணி
    (1) சமூகப் பல்லினத்தன்மை காணப்பட்டமை.
    (2) கோட்பாட்டு ரீதியாக கருத்தியல் வேறுபாடுகள் காணப்பட்டமை.
    (3) நவீனமயப்படுத்தப்பட்ட அரசியல் முறைமை காணப்பட்டமை.
    (4) சமப்படுத்த முடியாத வகுப்பு வேறுபாடுகள் காணப்பட்டமை.
    (5) பிரதிநித்துவ முறைமை விருத்தியடைந்து காணப்பட்டமை.

(……)

16. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பிரதான நிறுவனமாக அமைவது
    (1) சர்வதேச தொழிலாளர் அமையம் (ILO)
    (2) சர்வதேச நாணய நிதியம் (IMF)
    (3) மறுசீரமைப்புகள் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (IBRD/WB)
    (4) சர்வதேச சுகாதாரத் தாபனம் (WHO)
    (5) பாதுகாப்புச் சபை (Security Council)

(……)

[பக் 4 ஐப் பார்க்க]

17. அரசுசாரா நிறுவனங்கள்
   (1) அரசினால் முழுமையாக இயக்கப்படுகின்றன.
   (2) அரசின் மேற்பார்வையின்றி செயற்பட முடியும்.
   (3) அரசினால் பிரசைகளுக்கு வழங்கவேண்டிய சில சேவைகளை வழங்குவதற்கு உதவுகின்றது.
   (4) அனைத்தும் இலாபத்தை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன.
   (5) தற்போது இதன் செயற்பாடுகள் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன.

(……)

18. தற்கால சர்வதேச அரசியலில்
   (1) மத்திய கிழக்கு நாடுகள் தீர்மானமிக்கதொரு வகிபாகத்தை எடுக்கின்றன.
   (2) உலகின் அதிகார முகாம்கள் இரு துருவங்களாக காணப்படுகின்றன.
   (3) காணப்படும் நெருக்கடிகள் உலக பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கத்தை செலுத்தவில்லை.
   (4) மூன்றாம் உலக நாடுகளின் அழுத்தங்கள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றன.
   (5) அமெரிக்க அரசின் தலையீடுகள் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன.

(……)

19. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில்
   (1) அண்மைக்காலத்தில் இந்தியா குறித்த அவதானம் கணிசமாக குறைந்துள்ளது.
   (2) தற்போது பொருளாதார இராஜதந்திர தொடர்புகள் இதன் மையமாக மாறியுள்ளது.
   (3) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியின் போது பிரதானமாக முதலாளித்துவ நாடுகளுடன் மட்டும் ஒத்துழைப்புடன் செயற்பட்டது.
   (4) ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில், சர்வதேச நாடுகளுடன் உறுதியான நடுநிலை கொள்கையையே பின்பற்றியது.
   (5) 1965–1970 இடைப்பட்டக் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியானது அணிசேராக் கொள்கையை பின்பற்றியது.

(……)

20. இலங்கையின் அரசியல் கட்சிகள் பற்றிய **சரியான கூற்று**
   (1) சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியிலேயே தோற்றம் பெற்றன.
   (2) இடதுசாரி கட்சிகள் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை பிரபல்யமிக்கதாகக் காணப்படுகின்றன.
   (3) இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாக ஐக்கிய தேசிய கட்சியே அடையாளப்படுத்தப்படுகின்றது.
   (4) கூட்டணி அரசாங்கங்களில் சிறிய கட்சிகளின் ஆதிக்கம் தொடர்ந்தும் காணப்படுகின்றன.
   (5) இரு கட்சி முறை தொடர்ந்தும் செயற்பாட்டில் காணப்படுகின்றது.

(……)

- **21** தொடக்கம் **25** வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

21. காலனித்துவ ஆட்சி காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்த்திருத்தங்களால் ஏற்பட்ட விளைவுகளை ஒழுங்குப்படுத்தும்போது கிடைக்கும் **சரியான** சேர்மானம்
   (A) சுதந்திர ஊழியச் சந்தை தோற்றம் பெற்றமை.
   (B) சனாதிபதி அரசாங்க முறைமை உருவாக்கப்பட்டமை.
   (C) 4% மான மக்களுக்கு அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்தமை.
   (D) மாகாணத்திற்கான பிரதிநிதி ஒருவரை சட்டக்கழகத்திற்கு தெரிவு செய்துகொள்ள முடிந்தமை.
   (E) சமூக நலத்திட்டங்கள் விரிவடைந்தமை.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

22. 1833 கோல்புறூக் சீர்த்திருத்தின் அரசியல் விளைவுகளாவன
   (A) மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சி முறை உருவாகியமை.
   (B) அரசியலமைப்புசார் ஆட்சிமுறை உருவாகியமை.
   (C) கலப்பு பொருளாதார முறை உருவாகியமை.
   (D) எதிர்கால பாராளுமன்ற முறைக்கான அடித்தளம் இடப்பட்டமை.
   (E) சுதந்திர மற்றும் ஒற்றை நீதிமன்ற முறைமைக்கு வித்திட்டமை.

   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

23. 1931 டொனமூர் அரசியல் சீர்த்திருத்தத்துடன் தொடர்புடைய கூற்றுத்தொகுதி
(A) இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்கியமை.
(B) 7/10 அதிகாரங்கள் சுதேச மக்களுக்கு கிடைத்தமை.
(C) முதன் முறையாக சபாநாயகர் ஒருவரை அறிமுகப்படுத்தியமை.
(D) 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை கிடைத்தமை.
(E) ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

24. சோல்பரி அரசியலமைப்புடன் தொடர்புடைய கூற்றுத்தொகுதி
(A) பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து வருடங்களாகும்.
(B) நீதி அமைச்சர் செனட் சபையில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்.
(C) அரசியலமைப்பின்படி, நீதிப்புனராய்வு அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்படவில்லை.
(D) அரச சேவையின் சுயாதீனத்திற்காக அரச சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.
(E) இறுதி மேன்முறையீட்டு அதிகாரம் உயர் நீதிமன்றுக்கு வழங்கப்பட்டது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

25. 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு
(A) அதிகார வேறாக்க கோட்பாட்டை பின்பற்றி உருவாக்கப்பட்டது.
(B) மக்கள் இறைமையுடன் குடியரசாக்கப்பட்டது.
(C) ஒற்றையாட்சி முறையை ஏற்றுக்கொண்டது.
(D) பிரித்தானியாவுடனான சகல யாப்புசார் தொடர்புகளை முழுமையாக கைவிட்டது.
(E) முதன் முறையாக அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை உருவாக்கியது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| 26 | 1978ஆம் ஆண்டு மூலயாப்பின்படி பிரதமரின் அதிகாரம் உயர்வானதாகும். | 18 ஆம் திருத்தத்தின்படி தகவல் அறியும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | (…….) |
| 27 | 1978ஆம் அரசியல் யாப்பில் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பிலான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | மக்கள் தீர்ப்பு வழக்குகளை விசாரணை செய் யும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | (…….) |
| 28 | 1978ஆம் ஆண்டு மூலயாப்பின்படி 4½ வருடங்களின் பின் சனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். | 20ஆம் திருத்தத்தின்படி, இரட்டைக் குரியுரிமைக் கொண்ட நபரொருவர் சனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும். | (…….) |
| 29 | 21ஆம் திருத்தத்தின் பாராளுமன்றப் பேரவை இல்லாதொழிக்கப்பட்டு மீண்டும் அரசியலமைப்புச் பேரவை உருவாக்கப்பட்டது. | 21ஆம் திருத்தித்தின் கீழ் தேசிய பெறுகை ஆணைக்குழு மற்றும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழு என்பன மீண்டும் உருவாக்கப்பட்டன. | (…….) |
| 30 | 19ஆம் திருத்தத்தின் மூலம் சனாதிபதிக்கு எந்தவொரு அமைச்சினையும் வைத்திருப்பதற்கான உரிமை வழங்கப்படவில்லை. | விசேட விதிமுறைகளின் கீழ் பதவியிலிருந்த சனாதிபதி வசமிருந்த அமைச்சுக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிந்தது. | (…….) |

## பகுதி - B

31. அரிஸ்டோடில் அரசாங்கத்தினை வகைப்படுத்துவதற்கு இருவகையான அளவீட்டு கருவிகளை பயன்படுத்தினார். அவற்றினைப் பெயரிடுக.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

32. அரசியல் கட்சிகள் தோன்றுவதில் செல்வாக்கு செலுத்திய பிரதான **இரு** காரணிகளையும் தருக.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

33. கீழ்வரும் நூல்களை எழுதிய அரசியல் அறிஞர்களைக் குறிப்பிடுக.

(1) லெவியாதன் : ..................................................................................

(2) எனது போராட்டம் : ..................................................................................

34. மதசார்பின்மைவாதம் உலக அரசியலில் முக்கியத்துவம் பெற **இரு** காரணிகள் பங்களித்துள்ளன. அவை எவை?

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

35. மீள்கட்டமைத்தல் மூன்று மட்டங்களில் இடம்பெறுகின்றன. அவற்றில் **இரண்டைத்** தருக.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

36. அரசாங்கத்திற்கு பொறுப்புக்கூறுதல் என்பதில் **இருவகையான** அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. அவற்றினை குறிப்பிடுக.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

37. பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற பிரதான அரசியல் கருத்தியல்கள் **இரண்டை** எழுதுக.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

38. அமெரிக்க அரசியல் அமைப்பின் மூலங்களில் **இரண்டை** எழுதுக.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

39. பொதுக்கொள்கையுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள் **இரண்டைத்** தருக.

(1) ……………………………………………………………………………………………….....

(2) ……………………………………………………………………………………………….....

40. சர்வதேச அரசியலை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் சூழல்சார் காரணிகள் **இரண்டை** தருக.

(1) ……………………………………………………………………………………………….....

(2) ……………………………………………………………………………………………….....

41. (1) எகிப்தில் ஹொஷ்னி முபாரக்கின் ஆட்சியினை கவிழ்க்க ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கம் எவ்வாறு அழைக்கப்பட்டது? ………………………………………………………………………

(2) சர்வதேச ரீதியிலான அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டினை ஒழுங்கமைக்கும் மாற்று சக்தி எவ்வாறு அழைக்கப்படுகின்றது? ………………………………………………………………………

42. டொனமூர் அரசியல் சீர்த்திருத்தத்தின் கீழ் சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் **இரண்டைத்** தருக.

(1) ……………………………………………………………………………………………….....

(2) ……………………………………………………………………………………………….....

43. இலங்கையின் காலனித்துவ பொருளாதார மற்றும் சமூக பரிமாற்றங்கள் **இரு** தளங்களில் ஏற்பட்டன. அவை எவை?

(1) ……………………………………………………………………………………………….....

(2) ……………………………………………………………………………………………….....

44. கீழ்வரும் கூற்றுக்களால் அறியப்படும் அரசு மாதிரியை குறிப்பிடுக.

(1) சுதந்திரத்திற்கு பின்னரும் காலனித்துவ நாடுகளில் காணப்பட்ட காலனித்துவக் கட்டமைப்புகளை மேலும் முன்னோக்கிக் கொண்டு சென்ற அரசு

………………………………………………………………………………………………….

(2) 1920 - 1930 தசாப்தங்களில் உலக அரசியலை தலைகீழாக மாற்றிய அரசு

………………………………………………………………………………………………….

45. அர்த்த சனாதிபதி முறையின் பிரதான பண்புகள் **இரண்டினைத்** தருக.

(1) ……………………………………………………………………………………………….....

(2) ……………………………………………………………………………………………….....

**[பக் 8 ஐப் பார்க்க]**

46. கீழ்வரும் கூற்றுக்களால் வலியுறுத்தப்படும் அரசியல் கோட்பாடுகளை எழுதுக.

(1) அரசியல் ரீதியில் சுதந்திரம் பெற்ற மக்களுக்கு தமது அரசியல் விருப்பு மற்றும் எதிர்ப்பார்ப்பினை வெளிப்படுத்துவதற்குள்ள மிக முக்கிய பொறிமுறை.

…………………………………………………………………………………………………………

(2) அரசாங்கத்தில் ஒவ்வொரு துறைகளும் அனுபவிக்கும் அதிகாரங்களை எல்லைமீறி பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டது.

……………………..………………………………………………………………………………...

47. சோல்பரி அரசியல்யாப்பு பிரித்தானிய அரசியல் யாப்பில் இருந்து வேறுபடும் அம்சங்களில் **இரண்டை** எழுதுக.

(1) ………………………………………………………………………………………………….....

(2) ………………………………………………………………………………………………….....

48. சோல்பரி அரசியல் யாப்பில் காணப்பட்ட நீதிச்சேவை ஆணைக்குழுவிற்குப் பதிலாக 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட **இரு** நிறுவனங்களையும் பெயரிடுக.

(1) ………………………………………………………………………………………………….....

(2) ………………………………………………………………………………………………….....

49. (1) இலங்கையின் மாகாண சபைகளில் நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்ட பதவி நிலை எது?

………………...……………………………………………………………………………………

(2) மாகாண அமைச்சரவையின் உள்ள அமைச்சுக்களின் எண்ணிக்கை யாது?

…………………………………………………………………………………………………………

50. இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் 75ஆம் உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்திற்குரிய சட்டவாக்க அதிகாரம் வரையறுக்கப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினை** குறிப்பிடுக.

(1) ………………………………………………………………………………………………….....

(2) ………………………………………………………………………………………………….....

***